# 24

# தீர்க்கதரிசனம்

## மத்தேயு 26:56அ; யோவான் 5:39

*"கிறிஸ்து பாடுபட வேண்டுமென்று தேவன் தம்முடைய*
*தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும்*
*முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்"*
*(நடபடிகள் 3:18).*

தீர்க்கதரிசனத்தை நம்ப விரும்பாதவர்கள் அதன்மீது சிறிதளவே ஆர்வம் உடையவர்களாக இருக்கின்றனர். *இதைப் பற்றிச் சிந்தியுங்கள்!* தீர்க்கதரிசனம் என்பது வேதாகமத்தின் நேர்மைக்கு வல்லமை நிறைந்த ஆதாரமாக உள்ளது. தேவன் தமது வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றையும் காத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டில் இயேசுவைக்குறித்து கூறப்பட்ட நிறைவேறியவையான 332 தீர்க்கதரிசனங்கள் உள்ளன என்று ஃப்ளாய்டு ஹேமில்ட்டன் என்பவர் குறிப்பிட்டார்.[1] அவற்றில் சில மிகவும் திட்டவட்டமானவைகளாக உள்ளன. வேறு எந்த மதமும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட தோற்றுவிப்பாளரையும் இரட்சகரையும் கொண்டிருப்பதில்லை!

இயேசு தாம் தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்ட மேசியாவாக இருப்பதாக உரிமைகோரித் தமது வெளிப்படையான ஊழியத்தைத் தொடங்கியது ஒரு தற்செயலான நிகழ்வல்ல (ஏசாயா 61:1-3; லூக்கா 4:16-27). அவர் கூறியதைக் கவனித்தவர்கள் தவறாகப் புரிந்துகொள்ளவில்லை. கோபத்தில் அவர்கள் அவரைக் கொல்ல முயற்சிசெய்தனர் (லூக்கா 4:28-30). மனிதர்கள் அவரது சொந்த ஊரிலேயே அவரது ஊழியத்தை அழிக்கக்கூட முயற்சி செய்தனர்!

இயேசு நிறைவேற்றிய பல தீர்க்கதரிசனங்களை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.[2] அவர் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தார் (ஆதியாகமம் 22:18; நடபடிகள் 7:1-6; ரோமர் 4:13-25; கலாத்தியர் 3:6-16), மோசேயைப் போல் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார் (உபாகமம் 18:15-22; நடபடிகள் 3:22-26), மற்றும் தாவீதின் வித்தாக இருந்தார் (யோவான் 7:42; ரோமர் 1:3; 2 தீமோத்தேயு 2:8). அவர் உவமைகளில் பேசினார் (சங்கீதம் 78:2; மத்தேயு 13:34, 35). அவர் கன்னிப்பெண்ணுடைய மகனாக இருந்தார் (ஏசாயா 7:14; மத்தேயு 1:23-25), ஒரு கலிலேயராக இருந்தார் (ஏசாயா 9:1, 2; மாற்கு 14:70; லூக்கா 22:59), புறஜாதியாருக்கு ஒளியாக இருந்தார் (ஏசாயா 49:6; நடபடிகள் 13:46, 47), தாழ்மையான அரசராக இருந்தார் (சகரியா 9:9; மத்தேயு 21:1-8), கிளையாக இருந்தார் (எரேமியா 23:5;

எபிரெயர் 7:14), எகிப்திலிருந்து அழைக்கப்பட்டார் (ஓசியா 11:1; மத்தேயு 2:15), மற்றும் ஒரு நசரேயனாக இருந்தார் (மத்தேயு 2:23). அவர் உலகத்தோற்றத்திற்கு முன்பே நமது இரட்சகராக அறிவிக்கப்பட்டார் (எபேசியர் 1:3, 4; 3:9-11; 1 பேதுரு 1:20).

இந்தத் தீர்க்கதரிசனங்களில் சில பொதுப்படையாகத் தரப்பட்டுள்ளன. இருப்பினும், குறிப்பாக சிலுவையைக் குறித்த விஷயத்தில், பல நுணுக்கமான குறிப்புகள் உள்ளன: அவரது மரணத்தின் வகை (சங்கீதம் 22:16; சகரியா 12:10; யோவான் 12:32), ஒரு பொதுப்படையான மரணம் (உபாகமம் 21:22, 23; நடபடிகள் 5:30; 10:39; 13:29; கலாத்தியர் 3:13; 1 பேதுரு 2:24), முப்பது வெள்ளிக்காசுகளுக்காக நண்பன் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்படுதல் (சங்கீதம் 41:9; சகரியா 11:12; மத்தேயு 26:14, 15; 27:3-10), அவரைக் குற்றம் சாட்டியவர்கள் முன்பாக அமைதியாக நிற்குதல் (சங்கீதம் 38:13; ஏசாயா 53:7; மத்தேயு 26:59-63; மாற்கு 14:55-61; 1 பேதுரு 2:23, 24), கள்வர்களுடன் இருத்தல் (ஏசாயா 53:12; மத்தேயு 27:38; மாற்கு 15:28; லூக்கா 23:39-43), மற்றும் கைகளிலும் கால்களிலும் துளைக்கப்படுதல் (சங்கீதம் 22:16; சகரியா 12:10; யோவான் 20:27). அவரது உடைகளுக்காகச் சீட்டுப் போடப்பட்டது (சங்கீதம் 22:18; மாற்கு 15:24; யோவான் 19:23, 24), மற்றும் அவரது எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவில்லை (சங்கீதம் 34:20; யோவான் 19:36). அவருக்குக் கசப்புக்கலந்த காடி குடிக்கத் தரப்பட்டது (சங்கீதம் 69:21; மத்தேயு 27:34; யோவான் 19:28-30), அவர் தேவனால் கைவிடப்பட்டார் (சங்கீதம் 22:1; மத்தேயு 27:46), ஐசுவரியவானுடன் அடக்கம் பண்ணப்பட்டார் (ஏசாயா 53:9; மத்தேயு 27:57-60), மற்றும் புறக்கணிக்கப்பட்ட மூலைக்கல்லானார் (சங்கீதம் 118:22, 23; மத்தேயு 21:42; நடபடிகள் 4:11; ரோமர் 9:32, 33). பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, கழுதையின்மீது பவனிவந்திருந்த இந்தத் தாழ்மையான அரசரே (சகரியா 9:9; மத்தேயு 21:1-11) "ஆண்டவரும் கிறிஸ்துவுமாக" இருந்தார் என்று அறிவித்தார் (நடபடிகள் 2:36).

ஏசாயா, மேசியாவைப் பற்றிய தமது எண்ணற்ற தீர்க்கதரிசனங்களினால் "மேசியாத்துவத் தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறார். அவரது எழுத்துக்கள் புதிய ஏற்பாட்டில் ஐம்பது முறைகளுக்கு மேல் மேற்கோள் காண்பிக்கப்படுகிறது.[3] கிறிஸ்து பிறப்பதற்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு, அவர் [ஏசாயா], மேசியாவைப் பற்றி விரிவான சித்தரிப்பைத் தருவதற்குத் தேவனால் ஏவப்பட்டார். ஏசாயா 53ம் அதிகாரம் பழைய ஏற்பாட்டில் "பரிசுத்தங்களின் பரிசுத்தமாக" உள்ளது, அது "பாடுபடும் ஊழியர் பற்றிய பாடலாக" உள்ளது. யூதர்கள் அரசியல்ரீதியான, இராணுவரீதியான வெற்றியை விரும்பினர். பாடுபடுகிற மற்றும் மரித்த இரட்சகர் என்ற கருத்து அவர்கள் சிந்தையில் ஒருக்காலும் குறுக்கிடவில்லை. அவர்களிடம் இரக்கமாயிருங்கள். பரலோகத்தின் தேவன் சிலுவையில் மரித்தல் என்பது கற்பனை செய்யக் கடினமான விஷயமாக உள்ளது!

ஏசாயா 53ல் இருந்து வருகிற சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் குறைந்தது ஆறுமுறைகள் திரும்ப கூறப்படுகின்றன![4] எத்தியோப்பிய

*மந்திரிக்குப் பிலிப்பு, ஏசாயா 53ல் கூறப்படும் மனிதர் இயேசுதான் என்று கூறினார் (நடபடிகள் 8:30-35).*

*ஏசாயா 53ல் பயன்படுத்தப்பட்டுள்ள வினைச்சொற்கள் யாவும் கடந்த கால வினைச்சொற்களாக உள்ளன. எதிர்காலம் ஒரு வரலாறாக அறிவிக்கப் பட்டது. தேவன் (இயேசு) நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக் கிறார். தேவனுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகிய யாவும் ஒரேவிதமான உண்மை நிலையாக உள்ளன. தேவனுடைய தீர்க்க தரிசனங்கள் கடந்தகால வினையில் பதிவுசெய்யப்படுமளவுக்கு மிகவும் உண்மையாக உள்ளன. இயேசு தம்மைப்பற்றி கூறப்பட்ட எல்லாத் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினார். அவர் தமது சொந்த மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்தார் மற்றும் அவற்றை மிகவிவரமாக நிறைவேற்றினார்.[5] கிறிஸ்துவின் வாழ்வும் மரணமும் பூமியில் மிகவும் சரியாகச் சான்றுரைக்கப்பட்ட உண்மைகளாக உள்ளன!*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்புகள்

[1]Floyd Hamilton, *The Basis of Christian Faith,* rev. and enl. (New York: Harper and Row, 1964), 160. [2]*ஹியுகோ மெக்கார்ட்*, *"அவரது வாழ்வில் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்"* என்ற பாடத்தை "குமாரனாகிய தேவன்" என்ற புத்தகத்தில் வாசிக்கவும். [3]Gleason L. Archer and Gregory Chirichigno, *Old Testament Quotations in the New Testament* (Chicago: Moody Press, 1983), 92-134. [4]Ibid., 120-24. [5]*மத்தேயு 16:21 (மற்றும் மாற்கு 8:31; லூக்கா 9:22); 17:22, 23 (மற்றும் மாற்கு 9:30-32; லூக்கா 9:43, 44); 20:17-19 (மற்றும் மாற்கு 10:32-34; லூக்கா 18:31-33); லூக்கா 24:7, 44-46; யோவான் 13:19* ஆகியவற்றைக் காணவும்.